**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெருந்துறை**

**முன்னிலை : திரு.என்.மூர்த்தி, B.Com.,B.L.,**

**நீதித்துறை நடுவர், பெருந்துறை**

**2026 ம் வருடம் ஜுன் திங்கள் 03 ம் நாள் புதன் கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2057, ஸ்ரீ பராபவ வருடம் வைகாசி திங்கள் 20 ம் நாள்**

**பல்வகை மனு எண்.298/2026**

சுதாகர்,

த/பெ. சண்முகம் ... மனுதாரர்/எதிரி

/எதிர்/

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,

பெருந்துறை காவல் நிலையம்,

குற்ற எண்.303/2026,

U/s. 306 BNS. ... எதிர்மனுதாரர்/புகார்தாரர்

இம்மனுவானது இறுதியாக 03.06.2026 ம் தேதி விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.சலீம் அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பில் அரசு உதவி குற்றத்துறை கற்றறிந்த வழக்குரைஞர் செல்வி. P. ஜெயந்தி அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்களின் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

1. எதிரி தரப்பில் எதிரியை பிணையில் விடுவிக்கக்கோரி சட்டப்பிரிவு 480 BNSS Act-ன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார்.

2. மனுதாரர்/எதிரி தரப்பில் மனுதாரருக்கு எதிராக சட்டப்பிரிவு 306 BNS ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, கடந்த 09.05..2026-ம் தேதி முதல் சிறையில் உள்ளதாகவும், மனுதாரர்/எதிரி குற்றச்செயல்களில் ஈடுபடவில்லை எனவும், புகார்தாரர், மனுதாரர்/எதிரி மீது கொடுக்கப்பட்ட பொய்யான புகார் எனவும், மனுதாரர் நீதிமன்றத்தில் தவறாமல் ஆஜர் ஆவார் எனவும், எனவே

மனுதாரர்/எதிரி தலைமறைவாகமாட்டார் எனவும், நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைக்கு கட்டுப்படுவார் எனவும், ஆகவே பிணையில் விடுவிக்க கோரி மனு தாக்கல் செய்துள்ளார்.

3. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலில், 27.04.2026 ம் தேதி இரவு 10.10 மணிக்கு தோப்புப்பாளையம் விநாயகர் ஹாலோ பிளாக் கம்பெனியின் அலுவலக கதவு தாழ்பாளை இரும்பு ராடை கொண்டு அடித்து தாழ்பாளை உடைத்து உள்ளே சென்று மேஜை டிராயரில் இருந்த பணம் ரூ.30000/- மற்றும் TN 33BQ 0797 என்ற ROYAL ENFIELD CALSSIC 350 புல்லட் வண்டியை திருடி சென்றுவிட்டதாக வாதியானவர் கொடுத்த புகாரின் பேரில் எதிரி கைது செய்யப்பட்டு மனுதாரர்/எதிரி நீதிமன்றக் காவலில் உள்ளார் எனவும் தெரிவித்துள்ளார்.

4. எதிரியை பிணையில் விட்டால் மீண்டும் இதே போன்ற குற்ற சம்பவங்களில் ஈடுபடுவார் என்பதாலும், சாட்சிகளை கலைக்கவும், தலைமறைவாகவும் வாய்ப்புள்ளது என்பதாலும், எதிரிக்கு நிரந்தரமான முகவரி இல்லாததாலும், மனுதாரர்/எதிரியை பிணையில் விட கடுமையாக ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது.

5. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில் இவ்வழக்கில் மனுதாரர்/எதிரி கைது செய்யப்பட்டு 09.05.2026 முதல் 25 நாட்களாக நீதிமன்ற காவலில் உள்ளதாக கூறியுள்ளது தெரியவருகிறது. எதிரி நீதிமன்றகாவலில் இருந்த காலத்தை கருத்திற் கொண்டும், வழக்கு சூழ்நிலையை கருத்திற் கொண்டும் மனுதாரர்/எதிரியை கீழ்க்கண்ட நிபந்தனைகளின் பேரில் பிணையில் விடுவிக்க உத்தரவிடப்படுகின்றது.

i) எதிரி தலா ரூ.10,000/-க்கு தலா இருபிணையதாரர்களுடன் பிணைப்பத்திரம் எழுதிக் கொடுக்கவேண்டும்.

ii) எதிரி தினமும் காலை 10.30 மணிக்கு எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் ஆஜராகி 2 வாரங்கள் கையெழுத்திட வேண்டும்.

iii) எதிரி சாட்சிகளை கலைக்கவோ, மீண்டும் இம்மாதிரியான குற்ற செயல்களில் ஈடுபடவோ கூடாது எனவும்,

iv) எதிர்மனுதாரர் கோரும்பொழுது புலன்விசாரணைக்கு ஒத்துழைக்கவேண்டும் உத்தரவிடப்படுகிறது.

முடிவாக மனுதாரர்/எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த பிணை மனுவினை அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து - தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, மீண்டும் என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 03.06.2026 இன்று என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

N MOORTHY Digitally signed by N MOORTHY Date: 2026.06.03 17:42:04 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

பெருந்துறை.